**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 30/2019**

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியாகிய கிருஷ்ணகுமார் DW.2 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 23.09.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிருஷ்ணகுமார் DW2 | | | |
| Father Name | : | ஆறுமுகம். | Court | : | |
| Village | : | கிராம நிர்வாக அலுவலர், கிடாரங்கொண்டான். | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 35 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது கிடாரங்கொண்டான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது சர்வே எண் 489/1, 489/2, 489/3, 489/4 மற்றும் 489/5 ஆகியவைகளுக்காக நான் ரெங்கநாயகி என்பவரின் பெயரில் வழங்கிய அடங்கலாகும். அந்த அடங்கல் (சாட்சியை விசாரணை செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் மேற்படி ஆவணம் பெறப்பட்டுள்ளதால் வாதி தரப்புல் ஆட்சேபனை செய்யப்படுகிறது) **சா.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தானது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் ரெங்கநாயகி என்பவரின் அனுபவத்தில் உள்ளது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் கிடாரங்கொண்டான் கிராம நிர்வாக அலுவலராக 18.07.2024 முதல்

பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் திருச்சம்பள்ளியின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். எனக்கு சம்மன் தாசில்தார் மூலம் குருஞ்செய்தி மூலம் இன்று காலை தான் சார்வு செய்யப்பட்டது. தாசில்தார் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சிட்டா என்பது சொத்து யார் பெயரில் உள்ளது என்று கூறுவதைக் குறிக்கும். அடங்கல் என்பது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதையும், அந்த இடத்தில் என்ன சாகுபடி செய்து வருகிறார் என்பதையும் குறிப்பிட்டு வழங்கப்படுவது. நான் தாவா சொத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சென்றவாரம் சென்று பார்த்தேன். எதற்காக பார்த்தேன் என்றால் அங்கு என்ன சாகுபடி செய்துள்ளார்கள் என்பதற்காக பார்த்தேன்.

தாவா சொத்தை மட்டும் தான் பார்த்தேனா, அங்குள்ள எல்லா சொத்துக்களையும் பார்த்தேனா என்றால் எல்லா சொத்துக்களையும் பார்த்தேன். தாவா சொத்து நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்றால் நஞ்சை நிலமாகும். தாவா சொத்து தரிசாக உள்ளதா என்றால் இல்லை. மா, தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாமரம். தென்னை மரம் ஆகியவை புஞ்சை நிலத்தில்தான் சாகுபடி செய்வார்கள் என்றால் நஞ்சை நிலங்களிலும் செய்வார்கள். தாவா சொத்திற்கான சர்வே எண்களை எவ்வாறு நான் அடையாளப்படுத்திக்கொண்டேன் என்றால் FMB–யின் மூலம் அடையாளம் கண்டுகொண்டேன். தாவா சொத்திற்கான நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. 1431, 1432, 1433 ஆகிய பசலி ஆண்டுகளுக்கான அடங்கல் பதிவேட்டினை கொண்டு வந்தேனா என்றால் இல்லை. மேற்படி பதிவேடுகளில் அந்த அந்த வருடங்களில் யார் சாகுபடி செய்தார்கள் என்ற விபரம் இருக்குமா என்றால் இருக்காது. என்ன சாகுபடி செய்துள்ளார்கள் என்ற விபரம் மட்டும் இருக்கும்.

சர்வே எண் 489/1, 489/2, 489/3, 489/4 மற்றும் 489/5 ஆகியவற்றின் நிலத்தின் வகைப்பாடு புஞ்சை என எங்கள் அலுவலக "அ" பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த "அ" பதிவேட்டின் நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பிடப்பட்டு வாதி தரப்பில் **சா.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் நான் வழங்கிய அடங்கல் சான்றிதழில்கள் மேற்படி புல எண்களின் வகைபாடு நஞ்சை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து நஞ்சையா, புஞ்சையா

என்று தெரியாது என்றால் சரிதான். நான் வழங்கியுள்ள அடங்கல் சான்றில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய அடங்கல் சான்றானது "அ" பதிவேட்டில் ரெங்கநாயகி பெயர் உள்ளதால் அவரது பெயரில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு செல்லவில்லை என்றாலும், தாவா சொத்து எங்கு உள்ளது என எனக்கு தெரியாது என்றாலும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1424, 1425, 1426 மற்றும் 1429 ஆகிய பசலிகளில் தாவா சொத்தினை ராமசாமி மகன் ரெங்கபாஷ்யம் தான் சாகுபடி செய்து வருகிறார் என சிட்டா அடங்கல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1429 ஆம் பசலி என்பது 2019 ஆம் ஆண்டிற்குரியது என்றால் சரிதான். தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், வழக்கு நிலுவையில் உள்ளதால் 1430 முதல் 1433 வரை பசலி ஆண்டுகளுக்கான அடங்கல் வழங்கப்படவில்லை என்றாலும், தற்போது நான் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்துகொண்டு 1434ஆம் பசலி ஆண்டிற்கான அனுபவம் வாதியிடம் உள்ளதை பிரதிவாதியிடம் உள்ளதாக குறிப்பிட்டு சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எங்களது அடங்கல் பதிவேட்டின் படி தாவா சொத்தானது ரெங்கநாயகி அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். ரெங்கநாயகியிடமிருந்து செந்தில்குமார் என்பவர் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.